## கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2013, திசெம்பர் 2 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 3 ஆந் திகதிய 1843/45 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் தாபிக்கப்பட்டதும், (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்துக்கு இக்கட்டளைச் சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

3. நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் “பல்கலைக்கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

4. கலைப்பீடத்தினால் தற்போது நடாத்தப்படும் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுட்பட, மானிடவியல் மற்றும் விஞ்ஞானத்துறையிலான ஒவ்வொரு பட்டப்பின்படிப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டமும் இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்று நிறுவகத்தினால் நடாத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

5. இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று நிறுவகத்தின் உயர்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆளுகின்ற விதிகளும் ஒழுங்குவிதிகளும், பல்கலைக்கழகத்தின் மூதவையினதும் பேரவையினதும் ஒருப்பாட்டுடன் நிறுவகத்தினால் வேறுவகையாகக் கூறப்பட்டாலொழிய, மாற்றப்பட்டாலொழிய அல்லது திருத்தப்பட்டலொழிய, கலைப்பீடத்தின் உயர் பட்டங்களை ஆளுகின்ற அதே விதிகளும் ஒழுங்குவிதிகளும் ஆகவிருத்தல் வேண்டும்.

6. இச்சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கும், (இதனகத்துப்பின்னர் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் அமைவாக, நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மாணவர்களைச் சேர்த்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் என்ற துறைகளில் பட்டப்பின்படிப்புப் போதனைகளையும், பயிற்சியையும், ஆராய்ச்சியையும் வழங்குதல் ;

(இ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தின் பல்வேறு கிளைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்கள் என்பவற்றைத் தீர்மானித்தல் ;

(ஈ) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான கற்கை நிகழ்ச்சித்திட்டங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகத் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கங்களுக்காகப் பட்டப்பின்படிப்புப் பரீட்சைகளைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் நடாத்துதல் மற்றும் அத்தகைய பரீட்சையில் தேறியிருக்கின்றவர்களும் அத்துடன் பல்கலைக்கழக துணைவிதி மூலம் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியிருக்கின்றவர்களுமான ஆட்களை பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைகள் அளிக்கப்படுவதற்குத் தகவுடையோராகவுள்ளார்களென நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை ஒத்த அல்லது பொருளளவில் ஒத்த, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன், ஆசிரியர்களை, மாணவர்களை மற்றும் கல்விமான்களைப் பரிமாற்றுதல் என்ற வகையாக அல்லது வேறு வகையாக ஒத்துழைத்தல் ;

(ஊ) நிறுவகத்தில் சேருவதற்கு நாடுகின்ற மாணவர்களினால், அல்லது நிறுவகத்தின் மாணவர்களினால், பல்கலைக்கழகங்களிலும் ஒத்த அந்தஸ்தைக் கொண்ட இடங்களிலும் தேறப்பட்ட பரீட்சைகளையும், பின்பற்றப்பட்ட படிப்பு அல்லது கற்கைக் காலப்பகுதியையும், துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, நிறுவகத்திலான அத்தகைய பரீட்சைகளுக்கும் படிப்பு அல்லது கற்கைக் காலப்பகுதிகளுக்கும் அல்லது அவற்றின் அத்தகைய பாகத்துக்குச் சமமாகவுள்ளதென ஏற்றங்கீகரித்தல் மற்றும் அத்தகைய ஏற்றங்கீகாரத்தை எந்நேரத்திலும் மீளப்பெறுதல் ;

(எ) போதனைசார், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் நிர்வாக நோக்கங்களுக்கா க நூலகங்களையும், கணினி நிலையங்களையும், வேறு கட்டிடங்களையும் நிறுவகத்தின் நோக்கத்துக்காகக் கட்டியமைத்தல், அவற்றுக்குச் சாதனமிடுதல் மற்றும் அவற்றைப் பேணுதல் ;